# வைணவ ஆச்சாரியர்கள்

- ஆழ்வார்களைத் தொடர்ந்து வைணவம் வளர்த்தவர்கள் ஆச்சாரியர்கள்.
- வைணவ முதல் ஆச்சாரியார் - நாதமுனி
- வைணவ இறுதி ஆச்சாரியார் - மணவாள மாமுனி
- வேதம் அனைத்திற்கும் வித்து திருப்பாவை என்று கூறியவர் இராமானுஜர்.
- திருப்பாவை ஜீயர் என்று அழைக்கப்படுபவர் இராமானுஜர்
- இராமானுஜரின் குரு திருக்கோட்டியூர் நம்பி
- இராமானுஜரின் சீடர் கூரத்தாழ்வார்.
- குருவின் கட்டளைகளை மீறி திவ்விய ரகசியத்தை (திருமந்திரம்) அனைவருக்கும் சொன்னவர் இராமானுஜர்.
- இராமானுஜர் திருமந்திரத்தை மக்களுக்குச் சொன்ன இடம் திருக்கோட்டியூர்
- வைணவத்தின் வளர்ப்புத்தாய் இராமானுஜர்
- விசிஷ்டாத்வைதத்தைத் தோற்றுவித்தவர் - இராமானுஜர்
- இராமானுஜர் இயற்றிய நூல்கள் - ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம்
- தமிழில் ஒரு நூலும் எழுதாத பக்தர் இராமானுஜர்.
- வேதாந்த தேசிகர் விளக்கும் நெறி வடகலை,
- இராமானுஜர் விளக்கும் நெறி தென் கலை
- இராமானுஜர் நூற்றந்தாதி என்ற நூலை இயற்றியவர் திருவரங்கத்து அமுதனார்.

- வைணவத்தில் ஆச்சாரியாருக்கு சிறப்பான இடம் உள்ளது.
- ஆச்சாரியார் மூலமே ஆண்டவனை அடைய முடியும் என்பது வைணவ கோட்பாடு ஆகும்.
- ஆச்சாரியாரின் மகத்துவத்தை முதலில் வெளிப்படுத்தியவர் மதுரகவி ஆழ்வார்.
- இவர் நம்மாழ்வாரை ஆச்சாரியராக ஏற்றுக்கொண்டவர்.

## நாதமுனிகள்

- இவர் கி.பி.824 ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள வீரநாராயணபுரம் என்னும் இன்றைய காட்டுமன்னார்கோயில் பகுதியில் அந்தணக் குடும்பத்தில் பிறந்தார்.
- இவரது இயற்பெயர் ரங்கநாதன் என்பதாகும்.

## ஆளவந்தார்

- வைணவ ஆச்சாரியராகிய ஆளவந்தார் பிரபந்தங்களை மீட்டெடுத்த நாதமுனிகளின் பேரனாக ஈசுவரமுனிக்கு மகனாக வீரநாராயணபுரத்தில் கி.பி. 912 ஆம் ஆண்டு ஆடி மாதம் உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தார்.

## முதலியாண்டான்:

- கி.பி. 1027 ஆம் ஆண்டு சித்திரை மாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் பூந்தமல்லிக்கு அருகிலுள்ள பச்சைவர்ணபுரம் (நசரத்பேட்டை) என்னும் ஊரில் பிறந்தார்.

## பிள்ளை லோகச்சாரியார்:

- இவர் கி.பி.1205 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தில், திருவரங்கத்தில் பிறந்தார். இவருடைய தந்தை வடக்குத் திருவீதிப் பிள்ளை. இவருடைய இயற்பெயர் உலகாசிரியன் என்பதாகும்.

## வேதாந்த தேசிகர்:

- இவர் கி.பி.1268 ஆம் ஆண்டு விபவ வருடம், புரட்டாசி மாதம், சிரவணம் நட்சத்திரத்தில் புதன் கிழமை காஞ்சிபுரத்தில் பிறந்தார்.
- இவருடைய பெற்றோர் அனந்தசூரியன், தோத்தாத்ரி அம்மையார்.

## மணவாள மாமுனிகள்:

- கி.பி. 1370 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) பிறந்தார்.
- வேதாந்தங்களையும், திவ்யப் பிரபந்தங்களையும் தன் தந்தையிடமும் பாட்டனாரிடமுமே கற்றுத் தேர்ந்தார்.

------*****-----*****-----